# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.356/2023
Sessions)

Deposition of witness for ( Prosecution P.W.1
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | திவ்யா | -- | |
| Father's Name | முத்துசாமி | Calling | தாலுகா ஆபிஸ் - இளநிலை வருவாய் ஆய்வாளர் |
| Village | மல்லி | Religion | இந்து |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 25th day of August 2025.

**முதல் விசாரணை**

நான் மல்லி சர்ச் 3 வது தெருவில் குடியிருந்து வருகிறேன். திருவில்லிபுத்தூர் தாலுகா அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக வேலை செய்து வருகிறேன். எனக்கும் மல்லியை சேர்ந்த பழனிசாமி என்பவரது மகன் செல்வகுமாருக்கு காதல் திருமணம் நடைபெற்றது. அவர் சிவகாசியிலுள்ள குப்தா பிரிண்டர்ஸில் வேலை பார்த்து வந்தார். எனது கணவர் வழக்கமாக அவருடைய TN 37 DW 9137 என்ற பல்சர் இருசக்கர வாகனத்தில் வேலை சென்று வருவார். 22.02.2023 ம் தேதி மாலை 05.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது எனக்கு வெற்றிவேல் என்பவர் போன் மூலமாக என்னிடம் எனது கணவர் சிவகாசியிலிருந்து திருவில்லிபுத்தூருக்கு அவருடைய இருசக்கர வாகனத்தில் வந்துக்கொண்டிருந்ததாகவும் அவருக்கு பின்னால் வெற்றிவேலும் அய்யனார் என்பவரும் வேறு ஒரு இருசக்கர வாகனத்தில் வந்துக்கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது சாமிநத்தம் அருகில் சிவகாசி–திருவில்லிபுத்தூர் மெயின்ரோட்டில் 3940 என்ற எண் கொண்ட சிவப்பு கலர் கார் வேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து ரோட்டின் நடுவிலிருந்த வெள்ளைகோட்டை தாண்டி எனது கணவர் சென்றுக்கொண்டிருந்த இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டதாகவும் எனது கணவர் தூக்கி எறியப்பட்டு அவருடைய தலை, மூக்கு, கால் ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டுவிட்டதாகவும் அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாகவும் என்னிடம் தெரிவித்தார். நான் உடனடியாக எனது மாமனார் பழனிசாமியிடம் மேற்படி விபரத்தை தெரிவத்து ஒரு ஆட்டோவில் நானும் எனது மாமனாரும் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். நான் பார்த்தபோது எனது கணவர் காயப்பட்டு இறந்த நிலையில் இருந்தார். இது சம்பந்தமாக நான் ஒரு புகார் மனு கொடுத்தேன். நான் கொடுத்த **புகார் மனு**

**அசாஆ 1** ஆகும். புகார் மனுவில் எனது மாமனார் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தார். எனது கணவர் மீது விபத்து ஏற்படுத்திய காரை ஓட்டி வந்தவர் பெயர் முருகன் என்று தெரிந்துக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை இல்லை.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 25th day of August 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**